www.tamilarangam.net

# அண்மைய திருமலை கொழும்பு சம்பவங்கள்

# படுகொலைகளே !

17.04.87, **128 பேர் பலி :-**

திருமலைக்கும் ஹபரண எனும் பகுதிக்குமிடையே உள்ள காட்டுப் பகுதியூடாக 3 பஸ்வண்டிகள், 2 லொறிகளில் வந்து கொண்டிருந்த சிங்களவர்கள் மீது, ஆயுதம் தாங்கிய குழுவினர் நடாத்திய தாக்குதலில் 128 பேர் கொல்லப்பட்டு, 60 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். மேற்படி கொல்லப்பட்டவர்களில் குடியேற்றத்திற்காக கொண்டு வரப்பட்ட சிங்களவர்கள் உட்பட விடுமுறைக்காக சென்று திரும்பிய சில கடற்படையினர் மற்றும் இராணுவத்தினரும் அடங்குவர்.

## இறந்தவர்களில் 17 பேர் படை வீரர்கள்

இச்சம்பவத்தினை அடுத்து,

*)திருமலை மாவட்டமடங்கிலும் 36 மணிநேர ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதுடன், தீவிர தேடுதல் நடவடிக்கைகளில் அரச படைகள் முடுக்கி விடப்பட்டன.

*)11/04 முதல் ஒருதலைப்பட்சமாக அரசு தெரிவித்திருந்த போர்நிறுத்த அறிவித்தலை வாபஸ் பெறுவதாக அறிவித்ததுடன், தமிழர் பகுதிகள் மீது இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதாக பகிரங்கமாக அறிவித்தது.

*)திருமலை, மட்டக்களப்பு ஆகியவற்றிற்கான இரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன.

## திருமலைக் காடுகளில் தேடுதல் நடத்த கொழும்பிலிருந்து மேலதிக இராணுவம் விரைவு!

*)படுகொலைகளைப் புரிந்தவர்களைக் கண்டு பிடிப்பதாகக் கூறி, மேலும் 5000 அரச படைகளை, திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் குவித்து, தேடுதலை தீவிரப்படுத்தியது. குறிப்பாக திருமலை தம்பலகாமம், முழுமையான முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டது.

*)படுகொலை மேற்கொள்ளப்பட்ட பகுதிக்கு அண்மையில் ஆலயம் ஒன்றிற்கருகில் 3 தமிழர்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

## 5000 சிங்கள குடும்பங்களுக்கு துப்பாக்கி சப்ளை

*)திருமலை மாவட்டத்தில் மேலும் 5000 சிங்களவர்களை குடியமர்த்தி, ஆயுதங்களும் வழங்கப்படும், என அரசு அறிவித்துள்ளது.

20.04.87,

திருமலை மாவட்டத்தில் உள்ள 'வானவெல' சிங்களக் கிராமத்தினுள் புகுந்த ஆயுதம் தாங்கிய குழுவினர், 15 பொது மக்களை கண்மூடித்தனமாக சுட்டுக் கொன்றுள்ளனர். இவர்களுள் 5 ஆண்கள், 5 பெண்கள், 5 குழந்தைகள் அடங்குவர்.

*)திருமலை மாவட்டமடங்கிலும் தொடர்ந்து 14 மணி நேர ஊரடங்கு அமுலில் இருப்பதுடன், அரச படைகளின் வெறித்தனங்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

21.04.87,

கொழும்பு புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்தின் முன்பாக சன நெரிசல் அதிகமாக காணக்கூடிய மாலை 5.00 மணியளவில், வெடிக்க வைக்கப்பட்ட பாரிய வெடிகுண்டிற்கு இலக்காகி நூற்றுக் கணக்கான அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், நூற்றுக்கும் மேற்பட்டோர் கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் அனேகர் இரத்தப் பெருக்கு ஏற்பட்டுள்ளமையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தினை அடுத்து,

*)கொழும்புப் பகுதியெங்கும் இரவு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதுடன், அரச படைகளின் தேடுதல்களும், சிங்களக் குண்டர்களின் கடையெரிப்பு, கடையுடைப்பு, கொள்ளை போன்ற வெறிச் செயல்களும் அன்றிரவு முடுக்கிவிடப்பட்டன.

www.tamilarangam.net


*)கொழும்பு,கம்பஹா போன்ற பகுதிகளில் கலவரங்கள் உருவாகக்கூடிய சூழ்நிலைகள் காரணமாக இப்பகுதிகளில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

*)கொழும்பில் காடையர்களின் வெறியாட்டத்திற்கு,மருதானையில் 3 கடைகள்,ஆமர் வீதியில் 2 கடைகள்,கொட்டாஞ்சேனையில் 2 வீடுகள் கொள்ளையிடப்பட்டதுடன்,செட்டித் தெருவில் தமிழர் ஒருவர் கொல்லப்பட்டும் உள்ளனர்.

*)22/04 ல்,வெலிக்கடைச் சிறையினுள்,6 தமிழ் கைதிகள் சக சிங்களக் கைதிகளினால் கொல்லப்பட்டனர்.பின்னர்இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில்; இரு சிங்களக் கைதிகள் காயமடைந்தனர்.மிகுதி இருந்த தமிழ்க் கைதிகள் அனைவரும்,கொழும்பு ஆனந்தாக் கல்லூரிக்கு இடம் மாற்றப்பட்டனர்.

*)22/04 ல்,கொழும்பின் பற்பல இடங்களில் தமிழர்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்களில் 20 க்கும் மேற்பட்டோர் படு காயமடைந்துள்ளனர்.3 ம் குறுக்குத் தெருவில் தமிழர் கடைகளை சூறையாடிக் கொண்டிருந்த குண்டர்கள் மீது, இராணுவத்தினர் சுட்டதில் இரு சிங்களக் குண்டர்கள் காயமடைந்தனர்.இதே வேளை சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோர் என்ற சந்தேகத்தில் 100 குண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

*)23/04 ல்,தெமட்ட கொடப் பகுதியில்,தமிழர்களின் வீடுகளை சூறையாடும் முயற்சியில் ஈடுபட்டிருந்த குண்டர் கோஷ்டி ஒன்றிற்கு தலைமை தாங்கிய இரு இளம் பௌத்த பிக்குகள் கைது செய்யப்பட்டனர்.

*)கொழும்பு பொறளை சிறைச்சாலை மீது,குண்டர்கள் கல்லெறிந்து அட்டகாசம் புரிந்த வேளை,பொலீசார் குண்டாந்தடிப்பிரயோகம் மேற்கொண்டனர்.

*)22/04 ல்,கிரிநொச்சி- கொழும்பு பிரயாணிகள் இரயில் வண்டி கம்பஹாவில் நின்ற போது தமிழர்கள்,சிங்களக் காடையர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

*)இலங்கையில் அமைதி காக்க அனைத்து உலக நாடுகளினதும் உதவிகள்,ஒத்தாசைகள் கோரப்படுவதாகவும்,போராளிகளை ஒழிக்க எல்லா வித நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் எனவும் ஸ்ரீலங்கா மந்திரிகள் சபை கூடி முடிவெடுத்துள்ளது.

## யார் காரணம் ?

***" மேற்படி ஒரு வாரகாலத்தினுள் நடைபெற்ற பொது மக்கள் மீதான படுகொலைகளிற்கு ... தமிழீழ விடுதலைப் புலிகள்(எல்ரீரீஈ), ஈழப்புரட்சி அமைப்பு(ஈரோஸ்) என்பனவே பொறுப்பு என, இலங்கை அரசு,இந்திய மற்றும் உலக செய்தி ஸ்தாபனங்கள் தெரிவித்துள்ளன.!!!

***" கொழும்பு புறக்கோட்டை குண்டு வெடிப்பு, இஸ்ரேலியர்களின் உதவியுடன் ஸ்ரீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டதென- 24/04 ல்,ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் திரு.அமரசிறி குற்றம் சாட்டியுள்ளார்.

## 75 பொதுமக்கள் பலி !

21.04.87,
திருமலை-புல்மோட்டையில் கண்ணி வெடியொன்றில் சிக்கி 14 இராணுவத்தினர்கொல்லப்பட்டு,6பேர் காயமடைந்தனர்.

*) பதிலடி நடாத்திய அரசபடைகள் 75 ற்கும் மேற்பட்ட பொது மக்களை கண்மூடித்தனமாக சுட்டுக் கொன்றுள்ளனர்.

21/04/87,
யாழ்/காங்கேசன் துறை வைத்தியசாலை அருகே அமைந்திருந்த இராணுவ மினி முகாம் போராளிகளால் தாக்கப்பட்டு 16 ற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன்,6 போராளிகள் உயிரிழந்துள்ளனர்.

*)பதிலடியாக,குடாநாடு முழுவதும் அரச விமானங்கள் குண்டு பொழிந்து தாக்கியுள்ளன.நாவற்குழி, பலாலி,கோட்டை முகாம்களில் இருந்து தொடர்ச்சியான ஷெல்தாக்குதல் நடாத்தப்பட்டன. இவற்றின் விளைவாக 100 ற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


22.04.87. **வடக்கு, பகுதிகளில் விமான குண்டு வீச்சு**

யாழ்ப்பாணம், நாவற்குழி, சாவகச்சேரி, பருத்தித்துறை வல்வெட்டித்துறை, மந்திகை, காங்கேசன்துறை, மற்றும் பல பகுதிகள் மீது, 3 போர் விமானங்கள், 5 ஹெலிகொப்டர்கள் குண்டு வீசித்தாக்கின. நூற்றுக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டு, 200 ற்கும் மேற்பட்ட பொது மக்கள் படுகாயமடைந்தனர். ஏராளமான கட்டிடங்கள் சேதமாக்கப்பட்டதுடன் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து, 1000 க்கணக்கில் பொது மக்கள் வெளியேறியுள்ளனர். தொடர்ந்து யாழ்/கோட்டையில் இருந்தும் கடல் பிராந்திய கரையோரங்களில் இருந்தும் குண்டுத்தாக்குதல் நிகழ்த்தப்படுகிறது.

23.04.87. **தாக்குதல் சம்பவங்கள் தொடர்ந்து நடக்கின்றன!**

அரச விமானங்கள் மன்னித்தியாலத்திற்கு ஒரு முறை குடாநாடெங்கும் குண்டுவீசித்தாக்கியுள்ளன. இதில் 90 ற்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

24.04.87.
குடாநாடெங்கும் தொடர்ந்து அரசவிமானங்கள் குண்டுவீசித்தாக்குவதுடன், முகாம்களில் இருந்து குண்டுத்தாக்குதலும் இடம் பெறுகின்றன.

*) நீர்கொழும்பில், தமிழர் ஒருவரின் கடை, குண்டர்களால் தாக்கப்பட்டு, தீக்கிரையாக்கப்பட்டதை அடுத்து, ஏற்பட்ட பதட்டம் காரணமாக, அப்பகுதியில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

23.04.97. **அரசிற்கெதிரான ஆர்ப்பாட்டங்கள்!!!**

நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதனை தடுக்க முடியாத அரசு, உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டும் எனக் கோரி, ஊரடங்கு வேளையில் கொழும்பு நகரில் ஊர்வலமாகச் சென்ற, போது, பொலிசார் தடுத்து நிறுத்தியுள்ளனர். இதில், 400 பௌத்த பிக்குகளும், ஏராளமான மாணவர்களும் கலந்து கொண்டனர்.

*) களனியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் சுமார் 350 பேர், அரசிற்கெதிரான சுலோகங்கள் தாங்கி ஆர்ப்பாட்டம் நடாத்தியுள்ளனர். இவ் ஆர்ப்பாட்டம் பொலிசாரின் தலையீட்டினால் பின்னர் இடைநிறுத்தப்பட்டது.

*) கண்டி பேராதனை பௌத்த ஆலயமொன்றிற்கு முன்பாக, 150 பௌத்த பிக்குகளும், நூற்றுக்கணக்கான மாணவர்களும், படுகொலைகளைக் கண்டித்தும், இவற்றை தடுத்து நிறுத்த அரசு உடனடி நடவடிக்கையில் இறங்க வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

மேலதிக செய்திகள்:-

அணைக்கட்டில்
18.04.87. வெடிகுண்டு

கண்டி விக்ரோரியா நீர்த்தேக்க அணைக்கட்டுப் பகுதியில் தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்த 5 வெடி-குண்டுகள் தக்க சமயத்தில் அரச படைகளால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

*) ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த இராணுவ மற்றும் பொலிசார் அடங்கிய 200பேர் ஜெ.வி.பி. இயக்கத்தில் சேர எத்தனித்தமை கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, அரசு உயர்மட்ட குழு ஒன்று தீவிர புலன்விசாரணையில் இறங்கியுள்ளது.

*) ஸ்ரீலங்கா தென்பகுதியில் சிங்கள இளைஞர்கள் 'கைது செய்யப்படல்' நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அரச படைகளின் உதவியுடன் சிங்கள இளைஞர்கள் பலர், அரச எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும், தமிழர் பிரச்சனையில் அரசு சரியான முறையில் செயற்படவில்லை என்பதாலுமே, இவ்வாறு செயற்பட முனைகிறனர் என, அரச புலனாய்வுத் துறையின் அறிக்கை தெரிவித்துள்ளது.

*) அரச புலனாய்வுத்துறையின் செய்தியின் படி, ஜே.வி.பி. யுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில். 37 இராணுவத்தினர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

24.04.87.

ஸ்ரீலங்கா பாராளு மன்றத்தில், சிங்கள பொது மக்கள் படுகொலைகளை கண்டித்து, அதற்கு அரசின் பொறுப்பற்ற செயலே காரணமென குற்றம் சுமத்தி எதிர்க்கட்சியினர் குழப்பம் விளைவித்ததை அடுத்து, 5 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியே தூக்கிச் செல்லப்பட்டனர்.

*) ஸ்ரீலங்காவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த, நியூசிலாந்து கிரிக்கற் கோஷ்டியினர், அண்மைய குழப்பநிலைகளால் பாதுகாப்பின்மையைக் காரணம் காட்டி, ஸ்ரீலங்காவுடனான தமது கிரிக்கற் போட்டிகளைரத்து செய்வதாக அறிவித்துள்ளது.

www.tamilarangam.net

## இலங்கை ராணுவ கொடுமை

# "தோட்டத் தொழிலாளர் தகராறில் 13 பேரை கொன்று குவித்தது"

சென்னை, மார்ச் 28— இலங்கையில் மலையகப் பகுதிகளில் ஒன்றான சென் கூம்ஸ் என்ற தோட்டத்தில் தொழிலாளர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறுக்கு 'பயங்கரவாதம்' என்ற பெயரை இலங்கை அரசு வைத்து, நான்கு வயது சிறுவன், இரண்டு பெண்கள் உட்பட 13 பேரை கொன்று குவித்துள்ளது என்ற ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) வெளியிட்ட ஒரு செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

மலையகப் பகுதிகளில் தொழிலாளர்களிடையே ஏற்படும் சிறு தகராறுகள், நிர்வாகத்துக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் ஏற்படும் பிரச்சினைகள் ஆகியவற்றை 'பயங்கரவாதமாக' சித்தரித்து வரும் இலங்கை அரசு வடக்கு, மற்றும் கிழக்கு மாகாணங்களைப் போல் மலையகப் பகுதியிலும் ராணுவ நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்றும் அந்த செய்திக் குறிப்பு கூறுகிறது.

இது போன்ற சில சம்பவங்களுக்கும், 86-ம் ஆண்டு கலவரம் ஏற்பட்டதற்கும் காமினியின் ஆதரவு பெற்ற தொழிற்சங்கமே காரணம் என்றும் அந்தச் செய்தி கூறுகிறது. அந்த சம்பவத்தில் தமிழ் பேசும் தொழிலாளர்கள் 'இந்தியாவுக்கு ஓடு' என்ற கோஷத்துடன் தாக்கப்பட்டனர் என்றும் அந்தச் செய்தி கூறுகிறது.

அண்மையில் சென்கூம்ஸ் சம்பவத்தையடுத்து, தொழிலாளர்களுக்கு ஆதரவாக செயல்பட்டுவரும் முற்போக்குவாதிகளையும், அறிவு ஜீவிகளையும் அரசு கைது செய்து வருகிறது. இதுவரை சுமார் 260 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அந்தச் செய்திக்குறிப்பு கூறுகிறது.

### சிங்களக் குடியேற்றம்

சில ஆண்டுகளுக்கு முன் தேயிலைத் தோட்டமாக இருந்த குடோயா என்ற இடம் திட்டம் போட்டு காடாக்கப்பட்டு, வேலை செய்த தமிழ்த் தொழிலாளர்கள் அப்புறப்படுத்தப்பட்டனர். இப்போது, இந்த இடத்தில் ஆயுதப்பயிற்சி பெற்ற சிங்களர்கள் குடியமர்த்தப்படுகிறார்கள் என்றும் 'ஈரோஸ்' செய்திக்குறிப்பு கூறுகிறது. இவர்களுக்கு கடனுதவி, மற்றும் இதர சலுகைகள் அளிக்கப்படுகின்றன என்றும் அந்தச் செய்தி கூறுகிறது.

இதுபோல சிங்களக் குடியிருப்புகளை அமைத்து, தமிழ்பேசும் மலையகப் பாரம்பரிய பிரதேசங்களை ஒன்றுடன் ஒன்று தொடர்பில்லாமல் செய்தும், கலவரம் மற்றும் அபாயக் காலங்களில் ஓரிடத்திலிருந்து தமிழர்கள் இன்னொரு இடத்திற்கு ஆயுதங்கள் மற்றும் உதவிகள் போவதைத் தடுக்கவும் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் ஈரோஸ் செய்திக் குறிப்பு கூறுகிறது.

இவை தவிர ராணுவ முகாம்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்தச் செய்தி கூறுகிறது.

# தமிழர் பகுதிகளில் விமான குண்டு வீச்சு

சென்னை, ஏப். 5— இலங்கையில் படுவான்கரை, கொக்கட்டிச்சோலை ஆகிய இடங்களில் ஞாயிறன்று விமானங்கள் குண்டுவீச்சு நடத்தியதில் பல அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்று ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம் சென்னையில் தெரிவித்தது.

பாலையடிவெட்டை, சாகாமம் ஆகிய இடங்களில் கண்ணி வெடி வைக்கப்பட்டதில் பாலையடிவெட்டையில் இரு போலீசார் இறந்தனர்.

வெலிக்கடை சிறையில் உண்ணாவிரதம் இருக்கும் போராளிகளுக்கு ஆதரவாக மட்டக்களப்பிலுள்ள பல்வேறு ஸ்தாபனங்கள் மற்றும் பொது மக்கள் மட்டுநகர் செயிண்ட் மேரி ஆலயத்தில் ஞாயிறன்று உண்ணாவிரதமிருந்தனர். இச்சிறை கைதிகளுக்கு சாதகமான பதிலை ஏப். 25-ம் தேதிக்கு முன் தரும்படி மட்டுநகர் பிரஜைகள் குழு இலங்கை அதிபர் ஜெயவர்த்தனவை கோரியுள்ளது

## "150 தமிழர்களை ராணுவம் பிடித்துச்சென்றது"

இலங்கையில் காக்குலாய் ராணுவமுகாமிலிருந்து ஹெலிகாப்டர் மூலம் முல்லைத் தீவு மாவட்டத்திலுள்ள செம்மலை, அளம்பில் ஆகிய இடங்களுக்கு ஞாயிறன்று வந்திறங்கிய ராணுவத்தினர் பல்வேறு இடங்களிலிருந்து 150 பொது மக்களை கைது செய்து துப்பாக்கி முனையில் ராணுவமுகாமிற்கு அழைத்துச் சென்றனர்

# மட்டக்களப்பில் 300 பேர் உண்ணாவிரதம்

## சம்மேளன தலைவர், செயலாளர் பொலிஸ் விசாரணையின் பின் விடுதலை

மட்டக்களப்பு. வெலிக்கடை உண்ணாவிரதிகளின் கோரிக்கைகளை பரிசீலிக்கக் கோரியும் நீண்டகாலமாய் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை நீதி விசாரணைக்குட்படுத்த வேண்டும். அல்லது விடுதலை செய்ய வேண்டுமென்று கோரியும் மட்டக்களப்பில் நேற்று 300 க்கும் அதிகமானோர் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினர்.

புனித மரியாள் இணைப் பேராலய வளாவில் காலை 7 மணி முதல் 4 மணி வரை அமைதியாக இடம்பெற்ற இவ்வுண்ணா விரதத்தில் ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர்.

உண்ணாவிரதிகளால் ஜனாதிபதிக்கு இது சம்பந்தமான மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# யாழ். செல்லவிருந்த பஸ்களில் 13.04.87 130 மட்டு. வாலிபர்கள் பூஸா கொண்டுசெல்லப்பட்டனர்

கடந்த வியாழனன்று காலை மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் இடங்களுக்குச் செல்ல விருந்த ஐந்து இ.போ.ச. பஸ்களை அதிரடிப் படையினர் எடுத்தனர். இவ் வண்டிகளில் மட்டக்களப்பிலிருந்து பூஸாவுக்கு 130 வாலிபர்களை ஏற்றுச் சென்றனர் அதிரடிப்படையினரின் இத் திடீர் நடவடிக்கையினால் புத்தாண்டையொட்டி யாழ்ப்பாணம் செல்லவிருந்த பிரயாணிகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்ப வேண்டியதாயிற்று.

# தமிழ்த்தோட்ட தொழிலாளர்கள் மத்தியில் சிங்கள குடியிருப்பு

## 1,500 சிங்கள குடும்பங்களுக்கு துப்பாக்கி சப்ளை

சென்னை, மார்ச். 31: இலங்கையில் தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் சிங்களக் குடியிருப்பு அமைக்கப்பட்டுள்ளது.

ஹாட்டன்-கோட்டக்கலை என்னுமிடத்துக்கு இடையில் குடோயா என்றழைக்கப்படும் இடத்தில் தோட்டத் தொழிலாளர் குடியிருப்பில் சுமார் 300 ஹெக்டேர் பரப்பளவில் இந்த சிங்களக் குடியிருப்பு அமைக்கப்பட்டுள்ளது.

இப்படி குடியமர்த்தப்பட்டிருக்கும் 1,500 சிங்கள குடும்பங்களுக்கு துப்பாக்கி சப்ளை செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இந்த சிங்களக் குடும்பங்களுக்கு சிறந்த மின்சார சப்ளை, விவசாயத்துக்கு கடன்கள், நிலம், வீடுகள், வளர்க்க கால்நடைகள் வழங்குவதில் விசேஷ சலுகைகள் தரப்பட்டுள்ளன.

இந்த சிங்களக் குடியிருப்பில் ராணுவ முகாம் ஒன்றை ஏற்படுத்த சிங்கள அரசு திட்டமிட்டுள்ளது. நட்டநடுவில் இந்த சிங்கள குடியிருப்பு அமைக்கப்பட்டிருப்பதால் தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர் மக்கள் தொடர்பின்றி துண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தோட்டத் தொழிலாளர் குடியிருப்பு பகுதிகளில் தமிழர்களின் எண்ணிக்கையை குறைக்கவும், வன்முறை கலவரம் வெடிக்கும் காலத்தில் உணவுப் பொருட்கள் தமிழர் குடும்பங்களை போய்ச் சேருவதை தடுக்கவும் சிங்கள் குடும்பங்கள் இப்படி குடியமர்த்தப்பட்டிருப்பதாக

இதே போல அக்கரைபற்று, அகர

மேல் பகுதிகளிலும் சிங்கள குடும்பங்களை குடியமர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர் தொழிற்சங்கங்களுக்கு இடையிலான போட்டியையும் எஸ்டேட் நிர்வாகம் தொழிலாளர்களுக்கு இடையிலான கருத்து வேறுபாட்டையும் சாதகமாக வைத்துக் கொண்டு தோட்டத் தொழிலாளர் தமிழர் குடும்பங்களை ஒழிக்க சிங்கள குடும்பங்களை இப்படி குடியமர்த்துவதாக இலங்கை அரசு மீது புகார் கூறியுள்ளது.

Issued by the Press & Information Secretariat of the PEOPLE'S LIBERATION ORGANISATION OF TAMIL EELAM (PLOT) BM BOX 7313, LONDON WC1 3xx.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்